**செய்தி வெளியீடு எண்: 501** **நாள்: 26.08.2012**

செய்தி வெளியீடு

கால்நடைகள் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் இன்றியமையாததாக விளங்குவதாலும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் முதுகெலும்பாக விளங்குவதாலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு கால்நடை வளர்ப்பில் மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறது.

அந்த வகையில், காலியாக உள்ள 843 கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்களை உடனடியாக நிரப்பவும், 20 புதிய கால்நடை மருந்தகங்களை தோற்றுவிக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டார்கள். தற்போது கால்நடை மருத்துவ வசதி இல்லாத குக்கிராமங்களில் உள்ள கால்நடைகளும் மருத்துவ வசதி பெறும் வண்ணம், 50 கால்நடை கிளை நிலையங்களை 1 கோடியே 6 லட்சத்து 74 ஆயிரம் ரூபாய் செலவில் துவக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

நாளொன்றுக்கு 2 லட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால்பண்ணை மற்றும் 20 டன் பால்பவுடர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, தேசிய பால்வள வாரியத்தின் மூலம் திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், மேல்முடியனூர் கிராமம் அம்மாபாளையத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தத் தொழிற்சாலை பணிகளை விரைந்து முடித்திடும் வகையில், ஏற்கெனவே விடுவிக்கப்பட்ட 45 கோடியே 74 லட்சம் ரூபாய் தவிர, மேலும் 11 கோடியே 51 லட்சம் ரூபாயினை தேசிய பால்வள வாரியத்திற்கு வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த நவீன பால்பண்ணை மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தனது உற்பத்தியை தொடங்கும்.

மேலும், கால்நடை வளர்ப்பின் நவீன தொழில்நுட்பங்களை கிராமப்புற மக்களுக்கு எடுத்துச் செல்ல வசதியாக கால்நடை மருத்துவர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் 15 மாவட்ட தலைநகரங்களில் செயல்படும் தமிழ்நாடு மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களைப் போல், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களை 2 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக துவக்கவும், ஒரு மையத்திற்கு ஒரு இணை பேராசிரியர், இரண்டு உதவி பேராசிரியர், ஒரு தட்டச்சர், ஒரு தொழில்நுட்பப் பணியாளர், ஒரு அலுவலக உதவியாளர் என 6 பணியிடங்கள் வீதம் மூன்று மையங்களுக்கு 18 பணியிடங்களை உருவாக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், பெருகி வரும் கால்நடை மருத்துவர்களின் தேவையினைக் கருத்தில் கொண்டும், டெல்டா விவசாயிகளின் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும், தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்கென, கால்நடைப் பண்ணைக்குச் சொந்தமான முத்தம்மாள்புரம் கிராமம், மேலத்தோட்டம் மற்றும் கீழத்தோட்டத்தில் உள்ள 160.93 ஏக்கர் மற்றும் முத்தம்மாள்புரம் சத்திரம் நிர்வாகத்திற்குச் சொந்தமான 16.99 ஏக்கர், ஆக மொத்தம் 177.92 ஏக்கர் நிலங்களை மேற்படி கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு நிலக்கிரயமின்றி நிலஉரிமை மாற்றம் செய்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் கால்நடை பராமரிப்புத் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்:- 26.8.2012.